சார்பு நீதிமன்றம், குளித்தலை

MCOP.NO. **182 / 2020**

மனுதாரர் / எதிர்மனுதாரர் **ம.சா.2**வது சாட்சி இருக்கை எழுத்தர் நிலை - II திருமதி.A.அம்சவள்ளி அவர்களால் 44/1969 பிரிவின்படி **10.03.2026** ஆம் தேதியில் எடுக்கப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் : | ஆனந்தகுமார் | கிராமம் : | |
| த/பெ : | | வட்டம் : | |
| மதம் : | | தொழில்: | |
| ஜாதி : | | வயது : | |

முதல் விசாரணை

நான் இந்த மனுவின் சாட்சி ஆவேன். எனது சாட்சியத்தை நிருபண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். அதில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். எனது தரப்பு ஆவணங்களை தாக்கல் செய்கிறேன்.

1) என்னுடைய ஆதார் அட்டையின் ஜெராக்ஸ் நகல் - ம.சா.ஆ.7 (அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டது).

இரண்டாவது பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை

எனக்கு நீதிமன்றத்தில் இருந்து சம்மன் எதுவும் வரவில்லை. மனுதாரர் கேட்டுக்கொண்டதற்கு இணங்க சாட்சியம் அளிக்கிறேன். விபத்தில் இருந்துபோனவரை எனக்கு 10 ஆண்டுகளாக தெரியும். விபத்து நடந்த இடமானது நான் வசிக்கும் இடத்தில் இருந்து சுமார் 20 கிலோமீட்டர் தூரம் இருக்கும். விபத்தானது கிழமேல் சாலையில் நடந்தது. மேற்படி விபத்தில் இறந்துபோனவர் மேற்கில் இருந்து கிழக்கு இருசக்கர வாகனத்தில் சென்றார். மேற்படி விபத்து நடந்த சாலையானது தேசிய நெடுஞ்சாலையாகும். மேற்படி சாலையில் நான் வடக்குபகுதியில் நின்றுக்கொண்டிருந்தேன். கிழக்கில் இருந்து மேற்கு நோக்கி வந்த நான்கு சக்கர வாகனம் மற்றொரு வாகனத்தை முந்தி சென்று மோதிவிட்டது. மேற்படி விபத்து நடைபெற்ற இடத்தில் ஒரு கிளை சாலை உள்ளதா என்றால் எனக்கு அதுபற்றி தெரியாது. மேற்கில் இருந்து கிழக்கு நோக்கி செல்லும்பொழுது சாலையை கடந்து தான் செல்லவேண்டும் என்றால் சரிதான். மேற்படி இருசக்கர வாகனத்தில் வந்தவர் கவனமாக சென்றிருந்தால் விபத்தை தவிர்த்திருக்கலாம் என்றால் சரியல்ல. மேற்படி இருசக்கர வாகனத்தில் சென்றவர் சாலையை கடந்தபொழுது தான் விபத்தை ஏற்படுத்திக்கொண்டார் என்றால் சரியல்ல. காவல் நிலையல் நான் புகார் கொடுக்கவில்லை. நான் விபத்தில் இறந்துபோனவரை ஆம்புலன்ஸில் கையெழுத்து

செய்து ஏற்றவில்லை. மருத்துவனையிலும் நான் கையொப்பம் செய்யவில்லை. மேற்படி மருத்துவமனைக்கு நான் செல்லவில்லை. விபத்தில் இறந்துபோனவர் எனக்கு நீண்டகால நண்பர் என்பதாலும், அவருக்கு அதிக இழப்பீடு கிடைக்கவேண்டும் என்பதற்காக அவருக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை - இல்லை.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு சரி என்று ஒப்புக்கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

MUTHUSAMY ESWARAN

Digitally signed by MUTHUSAMY ESWARAN
Date: 2026.03.10 17:20:40 +0530

சார்பு நீதிபதி
குளித்தலை.